★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 13 ரபி. ஆகி 11 இதழ் 348

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26—1—83

### கிளிநொச்சி மினிபஸ் விபத்து:

## மற்றுமொருவர் காலமானார்!

### சடலங்களை தாயகம் கொண்டு செல்ல ஏற்பாடு

(ஏ. வி. மாணிக்கம்)

கிளிநொச்சியில் நடந்த உல்லாசப் பிரயாணிகளின் மினி பஸ் விபத்தில் படுகாயம் அடைந்து, யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தவர்களில் திருமதி தேவசேன சாத்தப்பவர்மா (31 வயது) நேற்றுக் காலை காலமானார்.

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இவர் ஒரு தையல் ஆசிரியை. இவரது கணவரான சாத்தப்பவர்மா (39 வயது) யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஸ்தலத்தில் இறந்த இருவருடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 14 பேரில் நேற்றுக் காலை ஒரு பெண் இறந்துள்ளார். மூன்று சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்த மூவரின் சடலங்களையும் யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்வதற்கு யாழ். மாநகராட்சிமன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், இறந்தவர்களின் உறவினர் தமது தாயகத்துக்குக் கொண்டுசென்று அடக்கம் செய்ய வேண்டுமென வலியுறுத்தியதைத்தொடர்ந்து யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரனும், முதல்வர் திரு. விசுவநாதனும் யாழ்ப்பாணத்திலுள்ள சிலவர்த்தகப்பிரமுகர்களோடு தொடர்புகொண்டு இந்தியா கொண்டுசெல்ல ஏற்பாடுகள்

(8ம் பக்கம் பார்க்க)

### ★ இராணுவ முகாமில் பலமாதங்களாக காவலிலிருக்கும்

# தமிழ் இளைஞர் சிலர் விடுதலை;

# 'குட்டிமணி'க்கு மன்னிப்பு?

(கொழும்பு)

இராணுவ முகாம்களில் பல மாதங்களாகத் தொடர்ச்சியாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் ஆறு பேருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அதேநேரத்தில்; இராணுவ முகாம்களிலுள்ள சில தமிழ் இளைஞர்கள் அடுத்த சில தினங்களில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னிப்புப்பெறும் கைதிகளில் 'குட்டிமணி' என்று அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன்போது மன்னிப்பு பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில்இப்பொதுமன்னிப்பு மூலம் ஏற்கனவே மரணதண்டனை பெற்ற கைதிகள் ஆயுட் சிறைத்தண்டனை பெறவிருக்கின்றார்கள்.

இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் சிலர் விரைவில் விடுதலைசெய்யப்படலாம் என்றும், ஏனையோர் மீது குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படலாம் என்றும் இம்மாதம் 19ம் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில்தலைப்புச்செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே. ஆறுபேருக்கும் எதிராக 1979ம் ஆண்டில் அமுலுக்கு வந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தனித்தனியாக இரு வழக்குகள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### பஸ்ஸில் குறைமாத சிசு!

(மன்னார்)

மன்னார் பஸ் நிலையத்தில் பெரிய மடுவுக்குப் புறப்படவிருந்த பஸ் ஒன்றின் சீற்றுக்குக்கீழே குறை மாதச் சிசு ஒன்று வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது!

நேற்றுக்காலை இந்த பஸ் ஸீற்றுக்குள் சிசு இருப்பதைப் பிரயாணிகள் சிலர் கண்டனர்.

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. பொன். சுகுணேந்திரன் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்தினார்.

### போக்குவரத்து சபைத்தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை மத்திய போக்குவரத்து சபைத்தலைவர் டாக்டர் காமினி விஜயசேகரா ராஜினாமா செய்துள்ளார்.

தற்போதைய போக்குவரத்து நிலைமைபற்றி அரசுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தியதைத்தொடர்ந்து ராஜினாமா செய்தார்.

போக்குவரத்துசபை செயலாளர் திரு. இலயபெருமா, தற்காலிகபோக்குவரத்துசபை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (க)

### வடக்கில் பரபரப்பை ஏற்படுத்திய

## மல்லாகம் கொலைவழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

வடக்கில்பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மல்லாகம்கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு நேற்று மாலை 4-30மணிக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் மல்லாகத்தில் 76 ஜூன் 8ம் திகதி அழகன் நாகன் அல்லது செத்தலை கொலை செய்ததாக செல்வராசா, கந்தசாமி ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். பாலா தப்பு சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம் எதிரி

(8-ம் பக்கம் பார்க்க)

### மாதகல் கடலில்

## தரை தட்டிய இந்தியக் கப்பல்

(மாவிட்டபுரம்)

நிலக்கரியை ஏற்றிவந்த போது மாதகலிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் கடலில் தரைதட்டிய இந்தியக் கப்பலான ''பைன் ஜூட்டை'' மீட்பதற்கான வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கெனஜப்பான் கப்பல் ஒன்று நிலக்கரியை ஏற்றிக்கொண்டு இங்கு வந்திருந்தது. இக்கப்பல் பாரிய கப்பலாக இருந்ததால் குறிகாட்டுவானில் தரித்துநின்று சிறிய கப்பல்கள் மூலம் நிலக்கரி இறக்கப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

3390 தொன் நிலக்கரியை இக்கப்பல் ஏற்றிவந்தபோது கடலின் ஆழம் போதாமலிருந்த காரணத்தினால் தரை தட்டியதாக தெரிவிக்கப்பட்டது.

## கச்சதீவு உற்சவம் மார்ச் 9-ல் ஆரம்பம்

(கச்சதீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் வழமைபோல் எதிர்வரும் மார்ச் மாதம் 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். மார்ச்மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சுரூபச் சுற்றுப்பிரகாரத்துடன் உற்சவம் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் திருவருளை முன்னிட்டு நிகழும் துந்துபி வருஷம் தைமாதம் 13-ந் திகதி (26-1-1983) புதன்கிழமை காலை 6-03 மணி முதல் 7-15 மணி வரை உள்ள மகர லக்கினத்தில்

எனது சகோதரன் லேற்பாண்டியன்குமாரி திருநிறை செல்வி
**மாதவிக்கும்**
யாழ்ப்பாணம் கந்தப்பசெட்டியார் அவர்களின் குமாரன் திருநிறை செல்வன்
**K. அசோகனுக்கும்**

எனது குமாரன் திருநிறை செல்வன்
**அசோகனுக்கும்**
பாண்டிய சுரேந்திரன் அவர்களின் சகோதரன் (லேற்பாண்டியன்) குமாரி திருநிறை செல்வி
**மாதவிக்கும்**

திருச்சி அலெக்ஸாண்டிரியா ரோடு கண்டோன்மென்ட் ஹோட்டல் லக்ஷ்மி திருமண ஹாலில் நிகழவிருக்கும் திருமணத்திற்கு தாங்களும் சுற்றஞ்சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

தங்கள்
வை. சுரேந்திரன்
பாண்டி

தங்கள்
வை. கந்தப்பச் செட்டியார்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

S. ராஜகோபாலபிள்ளை
S. வைத்தியநாதசுவாமிபிள்ளை
V. முத்துகாயாரோகணம் செட்டியார்
V. சுந்தரலிங்கம் செட்டியார்

(5957)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிலையத்திற்கு வானும் காரும் செலுத்தக் கூடிய சாரதி அத்துடன் ஓய்வு நேரங்களில் வர்த்தக நிலையத்தில் வேலைசெய்யக் கூடியவராயும் 40 வயதிற்கு கீழ்ப்பட்டவர் விண்ணப்பிக்கவும். இல. 5944, மே/பா. ஈழநாடு. 5944

வவுனியா நகரில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு பப்படம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. விரும்புவோர் நேரில் வரவும். 131, ஸ்ரேசன் றோட், வவுனியா. 5968

இறக்குமதிசெய்யப்பட்ட நவீன தச்சுவேலை இயந்திர இயக்குனரும் தளபாடம் செய்வதில் மிக அனுபவம் உள்ளவர்களும் உடன் தேவை. ஆங்கில அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமைகளுடன் இம்மாதம் 30-1-83-ம் திகதி பிற்பகல் 4 மணிக்குமுன் எம்முடன் நேரில் தொடர்புகொள்ளவும். உரிமையாளர், கணேசானந்தா ஸ்ரோஸ், 244 [462], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5959

நெசவு வேலையில் அநுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. சம்பள விபரம்: 5½ யார் சேலைக்கு 15 ரூபா, 4 யார் வேட்டிக்கு 10 ரூபா. உடன் விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்ரீஸ் 42, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பழகவிரும்புவோருக்கும் இடம் உண்டு. தங்குவதற்கும் இடவசதியுண்டு. 5953

## தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5954

## பயிற்சி

கொம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 5-2-83 முதலில் சேரும் 25 மாணவர்களுக்கு கட்டணத்தில் அரைவாசிக்கட்டணங்கள் அறவிடப்படும். விபரம் நேரில், The School of Computer Studies, 52/1, கனகரத்தினம், கட்டிடம், (வீனஸ் றெக்கோடிங் பார், மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5965

## விற்பனைக்கு

நல்ல சுற்றுடலில் உள்ள 1¾ பரப்பு காணி, கல்வீட்டுடன், மாட்டின் றோட்டில் உடன் விற்பனைக்குண்டு. B. F. சேவியர், 37/8. மாட்டின் றோட் மேற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5963

பாவனைக்குட்படுத்தப் பட்ட 300க்கு அதிகமான ஓடுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 677, அம்பாள் ஸ்ரோர்ஸ், ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம். 5970

அல்சேஷன் நாய்க்குட்டிகள் (ஆண்-பெண்) விற்பனைக்கு உண்டு. வயது (6 கிழமை) தொடர்பு: 16, ரெம்பிள் றோட் லேன், யாழ்ப்பாணம். 5956

ஒருமாத அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், டேவிட், 263, ஆஸ்பத்திரி வீதி, (சஞ்சுவான் கோயிலடி) யாழ்ப்பாணம். 5952

## விற்பனைக்கு

அச்சுவேலி வடக்கு பிள்ளையார் கோவில் வீதியில் சகல வசதிகளுமுடைய பெரிய வீட்டுடன் 5½ பரப்புக் காணியும், அச்சுவேலி வடக்கு செல்லமுத்து வீதியில் 3¼ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு சி. முத்துசுவாமி, 'திருமால்' அச்சுவேலி-வடக்கு. (5929)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் புனிதஜோன் பொஸ்கோ பாடசாலை, கச்சேரி என்பவற்றிற்கு அண்மையில் மூன்றுஅறைகள்கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. விபரங்களுக்கு: 7, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். 5971

## நீதிமன்றத்தின் முன்பாக நின்று நஞ்சருந்தியவர்!

[மாவிட்டபுரம்]

நீதிமன்றத்திற்கு முன்பாக செல்லும் வீதியில் நின்று நஞ்சருந்தி தற்கொலைசெய்ய முயன்றவர் ஆபத்தானநிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பூதராயர் கோவிலடியைச் சேர்ந்த எஸ். இராமேஸ்வரன் என்பவரே இவ்வாறு தற்கொலைமுயற்சி மேற்கொண்டவராவார்.

மல்லாகம் நீதிமன்றத்திற்கு முன்புறமாக செலும் வீதியில் நின்று இவர் நஞ்சை அருந்திய போது நீதிமன்றத்தில் கடமையிலிருந்த பொலிசாரும், சட்டத்தரணிகளும் பொதுமக்களும் இவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஒழுங்குசெய்தனர்.

சில வழக்கு விவகாரங்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகவும், நீதிமன்றத்தினால் இவர்மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும், இதன்காரணமாக மனமுடைந்தே இவர் இவ்வாறு தற்கொலைமுயற்சி மேற்கொண்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்
- (i) வீடு—2 பரப்புக் காணியுடன் மருதடி வீதி.
- (ii) வீடு—2 பரப்புக் காணியுடன் ஸ்ரான்லி வீதி.
- (iii) 4½ பரப்புக் காணி—கொய்யாத்தோட்டம்.

திருநெல்வேலி
2 பரப்புக் காணி

கொக்குவில்
- (i) 1½ பரப்புக் காணி பொற்பதி வீதி.
- (ii) 2 பரப்புக் காணி—குளப்பிட்டி ஒழுங்கை

கோண்டாவில்
2 பரப்புக் காணி—நவரத்தினசாமி—வீதி.

உரும்பிராய்
- (i) 5 பரப்புக் காணி—இந்துக்கல்லூரி வீதி.
- (ii) 4 பரப்புக் காணி—திருவீதி.

சாவகச்சேரி
2 பரப்புக் காணி—கந்துவில் வீதி.

தாவடி
12 பரப்புக் காணி—சுதுமலை வீதி.

இருபாலை
11 பரப்புக் காணி—சேர்ச்வீதி.
3 பரப்புக் காணி—டச்வீதி.

நவாலி
4½ பரப்புக் காணி.

கைதடி
50 பரப்புக்காணி—கோப்பாய் வீதி.

முல்லைத்தீவு
25 ஏக்கர் தோட்டம்.

மேலதிக விபரங்களுக்கு:
தோட்டக்காணிப் பிரிவு,

த பினன்ஸ்
கொம்பனி லிமிற்றட்,
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-23680

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் பாலகிருஷ்ணன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர் ஆறுமுகம் பாலகிருஷ்ணன் மைம்பெண் சரஸ்வதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். மனுதாரர்

வழ. இல. த/3703

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ந் திகதி.

இந்நீதிமன்ற கட்டளைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது:
சி. சிதம்பரநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி,
17-12-82

காரணம் காட்டும் தவணை 27-1-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்,
(5951) பதிவாளர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செ[illegible]

## லொறிச் சாரதி தேவை

வலிகாமம் கிழக்கில் வசிப்பவராகவும், பத்து வருட அனுபவம் உள்ளவராகவும், 30-45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். சங்க விதிகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும். 5-2-83-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்
வலி. கிழக்கு வாழைக்குலைச் சங்கம்.
நீர்வேலி. 5964

## WANTED

TRAINEE FINANCIAL ANALYST

Minimum Qualification:- Professional Part I of I. C M. A.

Previous experience an advantage though not essential.

Apply stating salary expected.

CONSULTANCY AND FINANCE AND DEVELOPMENT LTD.,
129, Temple Road, Jaffna.

## புதிய நடன வாய்ப்பாட்டு வகுப்புகள் ஆரம்பம்

வட இலங்கை சங்கீத சபை பாடவிதிகளுக்கமைய பயிற்சிபெற்ற பட்டதாரி ஆசிரியர்களால் நடன, வாய்ப்பாட்டு வகுப்புகள் நடாத்தப்படும். 28-1-83 வெள்ளிக்கிழமை தைப்பூசத்தன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

அதிபர்
அரஸ்கோ நிருத்தனலயம்
தொலைபேசி எண்: 23175

'கந்தன் அருள்',
54, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம். 5969

## வடபகுதி உருளைக்கிழங்கு மொத்த வியாபாரிகளுக்கும் விவசாயப் பெருமக்களுக்கும்

# ஓர் நற்செய்தி

செலவு சிறிது! சேமிப்போ பெரிது!!

- ✶ கிழங்கு பழுதடையுமே என்று பரிதவிக்காதீர்!
- ✶ குறைந்த விலைக்கு விற்று நட்டம் அடைவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!
- ✶ குளிரூட்ட வைத்துப் பழுதடையாமல் நீண்ட நாட்களின்பின் விற்று இலாபம் பெறுங்கள்!

கொழும்பு ஈஸ்வரன் பிறதர்ஸ் ஸ்தாபனத்தார்
வழங்கும் வசதியைப் பயன்படுத்துங்கள்!

✶

✶ கிழங்கு வகைகள் ✶ மரக்கறி வகைகள் ✶ பழ வகைகள்

முதலியவற்றைக் குளிரூட்டப்பெற்ற பாரிய குதங்களில் வைத்து நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து, நல்ல விலைக்கு விற்றுப் பல மடங்கு லாபம் பெறுங்கள்!

✶ இடவசதி, செலவு மற்றும் விபரங்களைத் தெரிந்துகொள்வதற்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

## யூனியன் கோல்ட் ஸ்ரோறேஜ் லிமிட்.

இல. 74, கொலிஞ் வீதி. கொழும்பு 13.
தொலைபேசிஇல. 35842

யாழ்ப்பாணத்தில்: சலாம்ஸ், 95, கே. கே. எஸ். வீதி. தொலைபேசி: 23697

(5890)

# "ரோமன்கத்தோலிக்கருக்கென புதிய ஒழுக்க வழிகாட்டி நெறி!"

## பரிசுத்த பாப்பரசர் அங்கீகாரம்!

ரோம் ஜன 25

ரோமன் கத்தோலிக்க மதத்தவருக்கென புதிய ஒழுக்க வழிகாட்டி நெறியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி நெறியில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கைச்சாத்திட்டு இதனை அமுல்படுத்த அதிகாரம் வழங்கியுள்ளார்.

உலகில் உள்ள கோடிக்கணக்கான ரோமன் கத்தோலிக்க மதத்தவரின் புதிய ஒழுக்க வழிகாட்டி நெறி சுமார் அறுபத்தியேழு வருடங்களுக்குப் பின்னர் தற்போது வெளியிடப்படுகின்றது.

இந்த புதிய வழிகாட்டி நெறியில் கத்தோலிக்கப் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் உரிமைகள் சில மத அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய ஒழுக்க வழிகாட்டி நெறியை இரு நூறு சட்ட வல்லுனர்களும், கத்தோலிக்க மத அறிஞர்களும் கூட்டாகச் சேர்ந்து கருத்துக்களைப் பரிமாறிய பின்னரே தயாரித்துள்ளனர்.

வெனிசுவெலா அதிமேற்றிராணியார் இது பற்றித் தெரிவிக்கையில், பாப்பரசரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான வத்திக்கானிலிருந்து வெளியிடப்படவுள்ள இந்த ஒழுக்க வழிகாட்டி நெறி ஏழு தொகுதிகளைக் கொண்டதாக இருக்குமென்றும், இதனை முழுமையாக அமுல்படுத்த ஆறு அல்லது எட்டு மாதங்கள் எடுக்கலாமென்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், பதினெட்டு கர்தினால்களை புதிதாக நியமிக்கவுள்ளார். (கி)

# இந்திராவுக்கு தங்கப்பதக்கம்!

## ஒலிம்பிக்கமிட்டி வழங்குகிறது

லாஸ்ஏஞ்சல்ஸ் ஜன 25

சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை லாஸ் ஏஞ்சலஸ் நகரில் இக்கமிட்டி கூடியபோதே பிரதமர் இந்திராவுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தியாவில் விளையாட்டுப் போட்டிகளை வளர்க்கச் செய்வதில் அக்கறை காட்டி வருவதை முன்னிட்டும் ஒலிம்பிக் உணர்வை நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருவதை முன்னிட்டுமே தமது கமிட்டி திருமதி காந்திக்கு தங்கப் பதக்கத்தை வழங்க முடிவு செய்துள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித்தலைவர் திரு. யுவான் அந்தனியோ சமராஞ்சே தெரிவித்தார்.

பிரதமர் இந்திராவுக்கும் தமது கமிட்டி முடிவை அறிவித்துள்ளதாக அவர் கூறினார். (கி)

## கண்பார்வை இழந்த பெண்களுக்கு விசேட சலுகை!

சென்னை, ஜன. 25

கண்பார்வை இழந்த பெண்களுக்கு இலவச பஸ் பயணச் சலுகை வழங்க தமிழக போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.

கண்பார்வை இழந்த பெண்களுக்கென உயர் பள்ளியொன்றையும் அமைப்பதென தமிழக கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (கி)

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்புத் தலைமையகத்தில் நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 916வது சுவீப்பின் முதல்மூன்று பரிசுகளும் வருமாறு:

முதலாவது பரிசு
**13 D 0454**
ரூ. 1,80,400

இரண்டாவது பரிசு
**13 F 0175**
ரூ. 67,650

மூன்றாவது பரிசு
**04 F 0549**
ரூ. 22,550

தலா ரூபா 811-80 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 09 A 0996 | 06 B 0906 | 02 J 0895 | 11 J 0507 |
| 10 B 0553 | 10 B 0760 | 21 K 0638 | 06 L 0132 |
| 12 B 0478 | 13 B 0920 | 12 L 0470 | 21 L 0237 |
| 17 B 0101 | 08 C 0416 | 01 M 0694 | 05 M 0887 |
| 12 C 0060 | 15 C 0894 | 07 M 0157 | 08 M 0037 |
| 06 D 0858 | 12 D 0093 | 09 M 0795 | 12 M 0926 |
| 13 D 0656 | 17 D 0579 | 13 M 0540 | 20 M 0937 |
| 11 E 0101 | 20 E 0302 | 03 N 0282 | 05 N 0125 |
| 08 F 0563 | 03 F 0272 | 15 N 0332 | 08 N 0716 |
| 21 F 0605 | 01 G 0272 | 02 O 0625 | 09 O 0203 |
| 04 G 0085 | 07 G 0557 | 02 O 0893 | 17 O 0921 |
| 08 G 0169 | 11 G 0718 | 04 P 0094 | 07 P 0017 |
| 12 G 0243 | 14 G 0631 | 08 P 0772 | 10 P 0114 |
| 17 G 0880 | 20 G 0449 | 06 Q 0286 | 17 Q 0921 |
| 02 H 0948 | 13 H 0550 | 21 Q 0819 | 04 R 0934 |
| | | 06 R 0549 | 09 R 0701 |
| | | 10 R 0573 | 20 R 0301 |
| | | 21 R 0074 | 21 R 0413 |
| | | 05 S 0513 | 15 S 0314 |
| | | 15 S 0357 | 16 S 0665 |
| | | 16 S 0915 | 01 T 0483 |
| | | 03 T 0439 | 04 T 0624 |
| | | 09 T 0241 | 12 T 0789 |
| | | 16 T 0337 | 16 T 0899 |
| | | 20 T 0897 | 12 U 0401 |
| | | 13 U 0171 | 16 U 0657 |
| | | 17 U 0656 | 22 U 0741 |
| | | 03 V 0316 | 06 V 0569 |
| | | 02 V 0663 | 20 V 0547 |
| | | 13 W 0110 | 14 W 0983 |
| | | 16 W 0979 | 08 X 0730 |
| | | 07 Y 0109 | 07 Y 0871 |
| | | 19 Y 0987 | 03 Z 0099 |
| | | 08 Z 0289 | 10 Z 0741 |
| | | 17 Z 0832 | 18 Z 0916 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

## உலக டென்னிஸ் வீரர் போக் ஓய்வுபெறுகிறார்

லண்டன், ஜன. 25

முன்னாள் உலக டென்னிஸ் சாம்பியன் ஜோன் போக், டென்னிஸ் ஆட்டப் பந்தயங்களை விளையாடுவதிலிருந்தும் ஓய்வு பெறவுள்ளார்.

இவருக்கு வயது 26 ஆகும். மிகவும் இளவயதிலேயே 'விம்பிள்டன்' டென்னிஸ்பந்தயங்களில் கலந்து உலக சாம்பியன் பட்டத்தை இவர் தட்டிக் கொண்டார்.

ஐந்து தடவைகள் தொடர்ச்சியாக இவர் 'விம்பிள்டன்' போட்டிகளில் கலந்து உலக சாம்பியனானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவீடன் நாட்டவரான ஜோன்போக் டென்னிஸ் ஆட்டமாடுவதையே தொழிலாகக் கொண்டு கோடீஸ்வரரானவரென்பதும் குறிப்பிடத்தக்கது!

இறுதியாக இவர் இரு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க வீரரான ஜோன் மக்என்ரோவிடம் தோல்விகண்டு தமது உலக சாம்பியன் பட்டத்தை இழந்தார்.

ஆயினும் 'டென்னிஸ் ஆட்டக்களத்தில் பண்புடன் நடந்துகொள்ளும் வீரர்' என்று டென்னிஸ் ரசிகர்களின் அபிமானத்தை இவர் பெற்றுள்ளார். (கி)

## இன்று

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இன்று இரவு இராமேஸ்வரம் தேவஸ்தான அலங்காரப்பட்டர் கோடிலிங்க சங்கர சாஸ்திரிகள் 'கணபதியின் அறுகம்புல்லின் மகிமை' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

# மாவோவின் பாரியார் மரணதண்டனை ஒத்திவைக்கப்படுமா?

(பீகிங்)

நவ சீனாவின் சிற்பியான அமரர் மாவோசேதுங்கின் பாரியார் சியாங்கிங்குக்கு விதிக்கப்பட்ட இருவருடகால ஒத்திவைக்கப்பட்ட மரண தண்டனையின் இறுதி நாள் இன்றுடன் முடிவடைகிறது. ஆனாலும் "குறித்தபடியே இவருக்கு மரண தண்டனை வழங்கப்படுமா என்பது பற்றி திட்டவட்டமாக எதுவும் நேற்றுவரை தெரிவிக்கப்படவில்லை.

1966ம் ஆண்டுக்கும், 76ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சீனாவில் ஏற்பட்ட கலாசார புரட்சிக்குப் பின்னணியாக இருந்தார் என்றே இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டை விசாரித்த நீதிமன்றம் 1980ல் இவருக்கு இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மரண தண்டனையை விதித்திருந்தது. இந்தகால அவகாசம் நாளையுடன் முடிவடைகிறது.

மாவோவின் பாரியாருடன் ஷங்காய் நகர மேயரும் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனைக்குள்ளானார். இவரது கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

இதுகுறித்து சீன அரசின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், சட்டபூர்வமானமுறையில் மாவோவின் பாரியார் மீது விதிக்கப்பட்ட தண்டனைபற்றி மீண்டும் பரிசீலித்த பின்னரே அரசின் முடிவைத் தெளிவாக வெளியிடமுடியுமென்றார்.

திருமதி மாஸேதுங், 80-ல் குற்றவாளியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த சமயம், நாட்டில் இவரை தூக்கிலிடவேண்டுமென்று ஒரு சாரார் வற்புறுத்திவந்ததும், இவர்கள் சுவரொட்டிகளில், கலாச்சாரப் புரட்சிக்குப் பின்னணியானவர்கள் என்று கூறப்பட்டவர்களை சூலமொன்றில் குத்திவைத்திருப்பதைப் போன்ற கேலிச் சித்திரங்களைக் கீறியிருந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

### சீக்கியர் பிரச்னை

## பேச்சுக்கள் நீடிப்பு

புதுடில்லி, ஜன. 25

நேற்று புதுடில்லியில் ஆரம்பமான சீக்கிய தீவிரவாதிகளுடனான பேச்சுவார்த்தைகள் இடையூறின்றித் தொடருகின்றன.

சீக்கிய தீவிரவாதிகளான அகாலிகள், அரசுதரப்பினர், எதிர்க்கட்சியினர் ஆகியோருக்கிடையிலான முப்தரப்புப் பேச்சுக்கள் இன்றும் தொடரவுள்ளது.

இப்பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சியினர், அகாலிதள் தீவிரவாதிகளின் பிரச்னைகள் குறுகிவந்துள்ளதை அவதானிக்க முடிந்ததெனத்தெரிவித்தனர்.

அரசுதரப்பினர் தெரிவித்த கருத்தில், அகாலிகள் தரப்புக் கருத்துக்களை தாம் நன்கு செவிமடுத்ததாகவும், அவர்கள் தாம் கொண்டுள்ள நிலையை தெளிவாக விளக்கினார்கள் என்றும் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சிகளையும் சேர்த்து இந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு, கடந்த திங்கட்கிழமை பிரதமர் திருமதி இந்திராகாந்தி எதிர்க்கட்சியினரை அழைத்து ஆலோசனை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### சென்னை விமான நிலையத்தில்

# விமான கடத்தல் காரர் மடக்கிப்பிடிக்கப்பட்டார்!

சென்னை ஜன 25

சென்னையிலிருந்து ஹைதராபாத் புறப்படவிருந்த விமானத்தை கடத்திச் செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்!

இச்சம்பவம் நேற்று சென்னையில் இடம்பெற்றது. திருப்பதி விமான நிலையத்திலிருந்து வந்து சென்னையில் தரித்து நின்ற உள்நாட்டு விமானச் சேவை விமானமொன்றே இக் கடத்தல் நாடகத்திற்குள்ளானது.

இந்த விமானம் சென்னை விமான நிலையத்தில் பயணிகளை இறக்கிவிட்டு ஹைதராபாத் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அப்போது விமானியின் அறையினுள் புகுந்த வாலிபர் ஒருவர் விமானத்தை ஹைதராபாத் கொண்டு செல்லாது திசை திருப்பும்படி விமானிகளை துப்பாக்கி முனையில் பயமுறுத்தினாராம்.

இவ்வாறு இந்த இளைஞர் பயமுறுத்திக் கொண்டிருப்பதை அவதானித்த சென்னை விமான நிலைய அதிகாரியொருவர் மெதுவாகச் சென்று இந்த வாலிபரை மடக்கிப் பிடித்தார். இதனைத் தொடர்ந்து விமான நிலையப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

கடத்தல்காரனின் நோக்கம் என்னவென்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. அவரின் வயது 22 என்று தெரிவிக்கப்பட்டது.

## வேலையற்றோருக்கு பயிற்சி

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்குப் பகுதியில் வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தும்பு வேலை, தையல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கரவெட்டி கிழக்கு கிராமோதய சபை செய்து வருகிறது.

பிரஸ்தாபபயிற்சியின் மூலம் இப்பகுதியில்வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று கரவெட்டி கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு எம்.வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

### மணிவாக்கு

வஞ்சகத் தன்மையால் மார்புவலியும், பயத்தினால் இருமலும், விரோதமனப்பான்மையால் இரத்தக் கொதிப்பும், தீராதகவலையினால் நீரிழிவும், எண்ணங்கள் விபசாரத்தன்மையால் புற்றுநோயும் ஏற்படுகின்றன. நல்ல எண்ணங்களால் ஆரோக்கியமான உடல் வாழ்வு ஏற்படுமென்பது உறுதி.

—ஸ்ரீ மயான யோகிகள்

# நமது நோக்கு

## தல யாத்திரிகர்களின் தலைவிதி

'செத்தார் எலும்பணியும்' திருக்கேதீச்சரத்தானையும், 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த' கோணமாமலையானையும் தரிசிக்கும் ஆவல் தமிழக மக்களுக்கு என்றும் இருக்கவே செய்யும்.

பாடல் பெற்ற இவ்விரு தலங்களையும் பார்க்கவந்த தமிழக யாத்திரிகர்கள்-விவசாயிகள், வியாபாரிகள் –36 பேரின் கதியை எங்கள் பத்திரிகையில் நேற்று வாசித்தவர்கள் எவரும் கண்ணீர் விடாமலிருக்க மாட்டார்கள்.

பஸ் விபத்து இந்த நாட்டுக்கு புதுமையானதல்ல! அதுவும்கேதீச்சரயாத்திரை முடித்து, நல்லூர்க் கந்தனைத்தரிசித்து அங்குதங்கிப் பின் கோணமாமலைக்குப் போகும்வழியில், கிளிநொச்சியில் இது நிகழ்ந்ததே என்பது கவலைக்குரியது; ஆனால் சோகத்தின் சிகரம் எங்கே?

தலயாத்திரையை தமிழகத்தில் ஒழுங்குசெய்த திரு. சந்திரராஜா தம்முடைய 40 வயது மனைவியை இழந்ததும், காயமடைந்த அவருடைய ஏழு, எட்டு வயது இரு பிள்ளைகள் "அம்மா, அம்மா" என்று தாயைக் கூப்பிட்ட வண்ணம் அழுதுகொண்டிருப்பதும் சோக நாடகங்களிலுமே காணமுடியாத காட்சி!

இவர்கள் அனைவரையும் அனுப்பிவைத்த திரு.சந்திரராஜா தமிழகத்திலிருந்து ஓரிருதினங்களில் இவர்களை வந்தடைவதாகச் சொல்லப்படும் செய்தி, இந்த யாத்திரிகர் கூட்டத்தின் தலைவிதி இருந்தவாறென்னே! என்ற திகிலையே பன்மடங்கு பெருக்குகின்றது.

காயப்பட்ட அனைவரும் குணமடைய வேண்டுமென்றும், குறிப்பாகத் தாயை இழந்த இவ்விரு குழந்தைகளும் தப்பிஒட்டியிருக்கும் தந்தையைச் சேரவேண்டுமென்றும் எல்லோரும் பிரார்த்திப்பார்களென்பது திண்ணம்.

யாத்திரிகர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. சரித்திர சம்பந்தமான இடங்களுக்கும் இயற்கை வனப்புள்ள மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், கடற்கரைகள்—இவற்றைப் பார்த்து இன்பமடைய வாபவர்களே உல்லாசப் பயணிகள்; பொதுவாகப் பணத்தை அள்ளி வீசும் வர்க்கத்தினர்!

நல்ல வசதிகளுக்குரிய பணத்துடன் வருபவர்கள் பொதுவாக உல்லாசத்துறையில் உறுதி செய்யப்பட்ட வாகனங்களில் படணம்செய்வதும், தங்கள் பணவசதிகளுக்கேற்ற விடுதிகளிலும், ஹோட்டல்களிலும் தங்குவதும் அவர்களின் மரபு.

யாத்திரிகர்களின் மனப்போக்கும்– அதுவும விவசாயிகள், வியாபாரிகள் சைவத்தலங்களைத் தரிசிப்பவர்களானல், சாதாரண வாகனங்களில் பயணம் செய்யத் தயங்கார்கள்; பகிடிக்கும் ஆடம்பர பவனிக்கும் வெகுதூரம்.

அது மட்டுமல்ல, தமிழக மக்கள் தங்களைக் கவரும் காலன் இந்தத் 'தர்மதீபமாகிய' இலங்கையில், மினி பஸ்ஸில் ஒளித்திருப்பான் என்பதை நம்பியிருக்கமாட்டார்கள்.

சில மாதங்களுக்கு முன் கதிர்காம யாத்திரையை முடித்துவிட்டு 'வானில்' வீடு திரும்பிய சிங்களக் குடும்பம் ஒன்று கொழும்புக்கு அணித்தாய் விபத்தில் பலியான சம்பவம் நினைவுக்குவருகின்றது. கையோடு கயிலாயம் சேர்க்கும் சக்தி எங்கள் வான்களுக்கு உண்டு.

இ. போ. ச. சாரதிகள் நவீன 'யமன்கள்' என்று ஒரு காலம் வர்ணிக்கப்பட்டது. போக்கு வரத்து நெருக்கடியை இ. போ. ச. சமாளிக்கமாட்டா தென்று தனியார் சேவை அனுமதிக்கப்பட்டது. இந்த மாற்றம் நல்ல பலனையளித்திருக்கிறதென்றபிரசாரம் கடந்த தேர்தல்களில் இடம்பெற்றது.

வீதி விபத்துக்கள், இவ்வித மாற்றத்தால் குறைந்துள்ளனவா? தனியார் வான் சேவை, அல்லது இ. போ. ச. வின் மினி பஸ் சேவை பாதுகாப்புடன் நடைபெறுகின்றதா.பொது மக்கள் அறிய வேண்டிய விபரங்கள் இவை.

இந்தக் கோர விபத்தில் சாரதி தப்பியிருப்பது வியப்பா? இத்துறையின் நிபுணர்கள் இதுபற்றிவிளக்கம் அளித்து ஆவன செய்ய உதவ வேண்டும்.

எம்மைப் பொறுத்தளவில், இந்த வேகமான வாழ்வில், பொது மக்கள் பஸ் பிரயாணம் ஆறு பேரல் பெருக்கெடுத்துப் பாயும் வேளையில், அண்ணைபிடி தம்பிபிடி' என்ற பாங்கில், சாரதியின்ஆசனத்தில்அரை குறைப் பயிற்சியுடன் எவரும் குந்திவிடலாமென்ற நம்பிக்கை வீதி விபத்துக்களின் அதிகரிப்புக்கு முதற் காரணமெனலாம்.

பயிற்சியும் ஆற்றலும் குறைந்தவரே வாகனத்தை எக்கட்டத்திலும் அசுர வேகத்தில் ஓட்டும் தன்மையினர். இக்காலன்களை வீதியிலிருந்து விலக்கி வைக்கும் திட்டம் தாமதமின்றித் தீவிரமாக செயற்படவேண்டும். குறிப்பிட்ட இவ்விபத்தில் மழைத் தூறலால் ஏற்பட்ட வழுக்கலைச் சமாளிக்கும் திறமையின்மைமுக்கிய காரணமாயிருக்கலாம்.

சாரதியின் பயிற்சி திறம்பட நடப்பதற்குரிய நடவடிக்கைகள் கண்டிப்பான முறையில் திருத்தப்படவேண்டும்; பிரயாண நெருக்கடி கூடிவருகிறது; வாகனங்கள் அதற்கு மேலாகக் குட்டி போடுகின்றன. எனவே பயிற்சி நிலையங்கள் புனரமைக்கப்படுவது அவசியம்.

தக்க பயிற்சிபெற்றவர்களே–நெருக்கடியில் வாகனத்தை அடக்கி ஆளும் திறமையுடையவரே லைசென்ஸ் பெறும் உரிமையுடையவராகச் சட்டங்களைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும்.

நாம் இவ்வாறு இலகுவாகப் பேனவினற் பிரசங்கம் செய்தும் என்ன பயன்?

இவ்வித கோர விபத்துக்களினால் உண்டாகும் கொடுமைகளை மனிதாபிமானத்துடனும் இரக்கத்துடனும் அணுகவல்ல அதிகார வர்க்கத்துக்கும், அவர்கள் கட்டுப்பாட்டில் தொழில் புரியும் ஊழியர்களுக்கும் பொறுப்புணர்வு உதயமானலொழியத் திட்டங்கள் செயற்படா?

பிரயாணிகள்–யாத்திரிகர்கள், உல்லாசப் பயணிகள் உட்பட –வேக வாழ்வுக்குத் தூபமிடும் பேர்வழிகளாகக் காணப்படுகின்றனர்; சாவதானமாகக் கட்டுப்பாட்டுடன் பயணஞ் செய்வதின் அவசியத்தை நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்துவதில் களைப்படையவில்லை.

# "தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவத்தின்பின்பே புலிப்படை உருவாகியது"

## "மக்கள் முன்னேற்றசபை" கருத்தரங்கில் திரு. நேசையா அளித்த விளக்கம்

(இ. கந்தசாமி)

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். அந்தப் படுகொலைகளுக்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் அன்று கடமையாற்றிய பொலிசாரே. அந்த சம்பவத்திற்குப் பின்னரே புலிப்படை என்று ஒரு படை உருவாகியது. அந்தப் படைபற்றி எனக்கு எதுவும் தெரியாது. மற்றவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

பேராசிரியர் கே. நேசையா கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

நாட்டின் ஒற்றுமை, நல்லெண்ணம், இனங்களிடையே நல்லுறவு என்பவற்றை இலட்சியமாகக்கொண்டு இயங்கிவரும் "மக்கள் முன்னேற்றச் சபை"யின் 2வது கருத்தரங்கு கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் நிக்கவரெட்டிய எம். பி. திரு. முதியான்சே தென்னக்கோன் ஏற்பாடு செய்த இக் கருத்தரங்கு யாழ் நாகவிகாரையைச் சேர்ந்த வண. நந்தாராமநாயக்க தேரோ தலைமைவகித்தார். பேராசிரியர் நேசையா மேலும் பேசுகையில் கூறியதாவது:

### நானும் ஒருவன்

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்துவைத்தவர்களில் நானும் ஒருவன். புலிப்படைக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணிக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. புலிப்படையினர் செய்யும் கொலை, கொள்ளைகளை நாம் வன்மையாகக் கண்டித்துவந்துள்ளோம். புலிப்படையைவிட தென்னிலங்கையிலும் வடஇலங்கையிலும் வேறுசிலரும் ரயில்களிலும் வீடுகளிலும் கடைகளிலும் கொள்ளையடித்துவருகின்றனர்.

இந்த நாட்டின் அமைதியும் ஒற்றுமையும் நிலவவேண்டுமானால் சிங்களவர் தமிழும் தமிழர் சிங்களமும் கற்கவேண்டும். அதேவேளையில் பொது மொழியான ஆங்கிலத்துக்கும் முக்கிய இடம் கொடுக்கவேண்டும்.

1940ம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலும் 50ம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் ஆங்கிலம் பொதுமொழியாக இருந்தபோது பிரச்னைகள் எதுவும் இருக்கவில்லை. 50ம் ஆண்டுகளின் பிற்பகுதிகளிலும் 60ம் ஆண்டுகளிலும் அரசியல் இனவாதருபம் எடுக்க ஆரம்பித்ததும் பிரச்னைகள் தோன்றத்தொடங்கியது. இனங்களிடையே ஒற்றுமையின்மை, அமைதியின்மைக்கு காரணமாக இருப்பது கட்சி அரசியல்முறையே. இன, சாதி, மத பேதங்களை மறந்து இந் நாட்டு மக்கள் சகலரும் ஒன்றுபடவேண்டும்.

### ஆண்டவனின் எச்சங்கள்

ஜனுப் ஜோபர் சாதிக் பேசுகையில் கூறியதாவது:

நாம் எல்லோரும் ஆண்டவனின் எச்சங்கள். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என எந்த இனத்தவர்களாக இருந்தாலும் ஒரே நோக்கத்துக்காகவே வாழ்கிறோம். எல்லாச் சமயமும் ஒரே நோக்கத்தைத்தான் கூறுகிறது. இதேவேளையில் நாம் வீணாக இன, மத, சாதிபேதங்களுக்காக–நலனுக்காகப் போராடுவதில் அர்த்தம் இல்லை.

### சிந்தித்த பின்பே செய்வர்

வடக்கில் பயங்கரவாதம் நிலவுகின்றது என்றும் அதனைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் கூறுகிறார்கள். பயங்கரவாதம், புலிப்படை என்றெல்லாம் கூறப்படுகிறது. வடபகுதி மக்கள் நன்றாகப் படித்தவர்கள். அவர்கள் நன்றாகச் சிந்தித்தபின்னரே செயலில் இறங்குவார்கள். அரசியல் பொருளாதார ரீதியில் தாம் வஞ்சிக்கப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அதற்கான அடிப்படைக் காரணத்தை முதலில்கண்டறிந்து பரிகாரம் காண முன்வந்தால் இந்நாட்டில் இனங்களிடையேயான பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்கமுடியும்.

### தேரோவின் யோசனை

வண பண்டிதர் மொகொட்டிவட்ட பஞ்ஞானந்த தேரோ பேசுகையில், வவுனியாவில் திரு. புலேந்திரன் சுட்டுக்கொலைப்பட்டதைக் கண்டித்து பேசினார்.

இதுபோன்ற கருத்தரங்குகளில் நாம் நின்று கூக்குரலிடுவதால் எதுவித பலனும் ஏற்படாது; அரசியல் தலைவர்களான திருவாளர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தன, அ. அமிர்தலிங்கம் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா போன்றோர் இக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள வேண்டும். சகல மாவட்டங்களிலும் இதுபோன்ற கருத்தரங்குகளை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினர்.

இச்சந்தர்ப்பத்தில் எழுந்த திரு. முதியான்சே தென்னக்கோன், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி பண்டாரநாயகா, திரு. மைத்திரிபால சேனநாயகா, திரு. ரேணுகா விஜயவீரா, டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா உட்பட சகல அரசியல் தலைவர்களுக்கும், எம். பிக்களுக்கும் இக் கருத்தரங்கிற்கு அழைப்பு அனுப்பப்பட்டதாகவும், திருமதி பண்டாரநாயகா, மைத்திரிபால சேனநாயக்கா, கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோர் வரமுடியவில்லையெனப் பதில் அனுப்பியிருக்கிறார்கள் என்றும் கூறினர்.

### அரசியல் சூழ்நிலை

திரு. எஸ். கே. அம்பலவாணர் பேசுகையில் கூறியதாவது:–

"தமிழ் மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முதலில் சுமார் 5 ஆண்டுகள் ஒற்றையாட்சியை விரும்பி சிங்கள மக்களுடன் எதுவித பிரச்னையுமின்றி வாழ்ந்துவந்தார்கள். பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்காக ஏற்படுத்திய சூழ்நிலை காரணமாக தனிச் சிங்களச்சட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. சிங்களம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழ்மக்கள் 25 ஆண்டுகள் சமஷ்டி ஆட்சி கோரி போராட்டம் நடத்தினர். இன்று தனியரசு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையில் தனிநாட்டுப் போராட்டம் நடத்திவருகிறார்கள். இன்றைய நிலை ஒரு அரசியல் திருப்பத்திலேயே ஏற்பட்டது".

மற்றும் பலரும் உரையாற்றினர். [இ]

## அன்பின் ஆசானுகத்துலங்கிய தோலக்கட்டி தோமஸ் அடிகள்

-- அருட்திரு ஏ. எம். ஸ்ரீபன் -- சி. ஆர்

தைத் திங்கள் 26–ம் நாள் வண. தோமஸ் அடிகளாரை அறிந்த அனைவருக்கும் ஓர் புனிதபிறந்தநாள். ஆம் இன்று தான் அவர் விண்ணில் பிறந்தநாள். இவ்வுலகைவிட்டுப் பிரிந்த நாள்' இறைவன் கொடுத்த பணியை இனிதே முடித்து இறையுடன் இணைந்த இன்பநாள்.

1886–ம் ஆண்டு பங்குனி மாதம் 7–ம் நாள் இந்த உலகில் உதித்த அவர் 1964–ம் ஆண்டு தைத் திங்கள் 26–ம் நாள் இறையடி சேர்ந்தார். இவ்வுலகில் அவரது வாழ்க்கையானறு மறைந்ததும் மாசற்றதும் புதைந்ததும் புனிதமானதும் நெகிழ்ந்ததும்நிறைவானதுமாகத் திகழ்ந்தது.

பிறப்பிலிருந்து இறப்புவரை உடல் நோயாளியாக இருந்தாலும் ஆன்ம மருத்துவராக விளங்கினர். அவரது வாழ்வின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இறைவன் சிறப்பான முறையில் அவரில் செயல்பட்டார். இளைஞனுக இருக்கும் போதே பெரும் நோக்கு உடையவராக விளங்கி அவரது சக மாணவரால் (தத்துவ ஞானி) மெய்யியல் வாதி என மெச்சப்பட்டார். அனைத்தையும் ஆண்டவரிலேயே நோக்கும் அளப்பரிய ஞானத்தைக் கொண்டிருந்தார்.

ஐந்து ஆண்டுகள் வாழ்வதே கடினம் என ஆசிரியர்களால் கணிக்கப்பட்ட அவர் 6–1–1912–ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 52 ஆண்

(5ம் பக்கம் பார்க்க)

# "மேலதிகாரி அளித்த அதிகாரத்தின்பேரில் 3-வது எதிரியை விசாரணைசெய்தேன்!"

## நீர்வேலி கொள்ளை, கொலைவழக்கு:

## ஏ. எஸ். பி. ஜுராம்பதி சாட்சியம்

[இ. கந்தசாமி]

"எனது மேலதிகாரி எனக்கு அளித்த அதிகாரத்தின் பேரிலேயே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் 3வது எதிரியை விசாரணை செய்தேன்"

இவ்வாறு நீர்வேலி கொள்ளை கொலை வழக்கில் 'வொயர் டயர்' விசாரணையில் சாட்சியமளித்த ஏ. எஸ். பி. திரு. ஜுராம்பதி கூறினார்.

இந்த வழக்கில் மூன்றாவது எதிரியான தேவனால் அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பான 'வொயர் டயர்' விசாரணையில் சாட்சியமளித்த ஏ. எஸ். பி. ஜுரம்பதியை எதிர்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா குறுக்குவிசாரணை செய்தார்.

புல்லர்ஸ் வீதியிலுள்ள மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி எல். டி. மூனமலையின் முன்னிலையில் நடைபெற்றுவரும் இந்த விசாரணையில் தங்கத்துரை, குட்டிமணி, தேவன் சிவபாதன்மாஸ்டர், நடேசுதாஸன் ஆகியோர் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சத்தியேந்திராவுடன், சட்டத்தரணிகளான திரு. ஜி. குமாரலிங்கம், திரு. ரி. பாக்கியநாதன், திரு. ரி. சச்சிதானந்தன் ஆகியோர் ஆஜராகினார்கள்.

குறுக்குவிசாரணையில் நேற்று முன்தினம் ஏ. எஸ். பி. ஜுரம்பதி அளித்த சாட்சியம்:-

நீர்வேலி வங்கிக்கொள்ளையின் 1ம் எதிரி தங்கவேலுவை விசாரணைசெய்யும் பொறுப்பு ஏ. எஸ். பி. மெண்டிஸிடமும் 2ம் எதிரி குட்டிமணியை விசாரணைசெய்யும் பொறுப்பு ஏ. எஸ். பி. கனகசிங்கத்திடமும் 3ம் எதிரி செல்லத்துரை சிவசுப்பிரமணியத்தையும் மற்றும் அருணகிரிநாதன், சிறிகுமார், குலசேகரராஜசிங்கம், முருகையா ஆகியோரை விசாரணை செய்யும் பொறுப்பு என்னிடமும் ஒப்படைக்கப்பட்டன.

### சட்டம்பற்றி விளக்கினேன்

3ம் எதிரியிடமிருந்து 81-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதியும், 18ம்திகதியும் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன்.

அவரிடம் 1979ம் ஆண்டின் 48ம் இலக்க பயங்கரவாதத்தை தடுத்தற்கானசட்டத்தின் (தற்காலிக ஏற்பாடு) 14 (1) ஏற்பாட்டை விளக்கிக்கூறி இதன் கீழேயே அவர் விசாரிக்கப்படுவதாகக் கூறினேன். 2நாட்களும் 4 தடவைகள் இச்சட்டம்பற்றி அவரிடம் கூறினேன்.

எனது மேலதிகாரியான அத்தியட்சகர் எனக்கு அளித்த அதிகாரத்தின் பேரிலேயே பயங்கரவாத தடைச் சட்டத்தின் 6. உபபிரிவு ஒன்றின்கீழ் 3வது எதிரியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன்.

சட்; சத்தியேந்திரா: பயங்கரவாத தடைச்சட்டத்தின் 6 (1) பிரிவின்கீழ் எவரையும் விசாரணைசெய்ய உமக்கு உரிமையில்லை.

ஜுராம்பதி: மேலதிகாரியின் கடிதத்தின்படி எனக்கு விசாரணைசெய்ய உரிமைஉண்டு.

சத்: அச்சட்டத்தின்கீழ் அப்படி ஒருகடிதத்தைத்தர உமது மேலதிகாரிக்கும் அதிகாரம் இல்லை.

சாட்சி: அவருக்கு அதிகாரம் உண்டு.

சத்: மீண்டும் கூறுகிறேன். அச்சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய உமக்கு அதிகாரம் இல்லை.

சாட்சி: எனக்கு அதிகாரம் உண்டு.

சத்; பயங்கரவாததடைச் சட்டத்தின் 6 (1)ம் பிரிவின் கீழ் நீங்கள் அவ்வாறு விசாரணை நடத்தியது சட்ட விரோதமானது என்று நான் மீண்டும் கூறுகிறேன்.

சாட்சி: சட்டத்துக்குட்பட்டது.

சத்: உமது மேலதிகாரியின் எழுத்துமூலமான அனுமதியின் பேரில் அவர்களை விசாரணை செய்ய உமக்கு அனுமதி இருக்கின்றது என்று இன்னமும் கூறுகிறீரா?

சாட்சி; ஆம்.

சத்: பொலிஸ் அதிகாரிகள் சட்டத்திற்கமைய நடப்பது முக்கியம் என்பதை ஒப்புக்கொள்கிறீரா?

சாட்சி; ஆம்.

சத்) நீர் பொலிஸ் அதிகாரி என்ற முறையில் சட்டப்படிதான் நடந்துகொள்கிறீரா?

சாட்சி; சட்டத்தால் தரப்பட்ட அதிகாரங்களையே நான் பயன்படுத்துகிறேன்.

சத்: கடைசித் தடவையாகக் கேட்கிறேன். நீங்கள் சட்டப்படி நடப்பதாகச் சபதம் எடுத்துக்கொள்கிறீர்களா?

சாட்: எனக்கு சட்டத்தால் தரப்பட்ட அதிகாரங்களின்படியே நடக்கிறேன். சட்டத்திற்கு இணங்கியே செயல்படுகிறேன்.

சத்: பொலிஸ் சேவையில் எத்தனை வருட சேவை?

சாட்; 26 வருடங்கள்.

சத்: நீர் அனுபவமுள்ள பொலிஸ் அதிகாரி என எண்ணுகிறீரா? அல்லது கணிசமான அனுபவமுள்ள அதிகாரி என எண்ணுகிறீரா?

சாட்: 26 வருட அனுபவம் உண்டு. 1956 ஜுன் 15ம் திகதி சப்-இன்ஸ்பெக்டராகச் சேர்ந்து 6 மாத பயிற்சிக்குப் பின் முதன் முதலில் கண்டியில் கடமையாற்றினேன்.

சத்: விசாரணை நடத்துவது எப்படி எனப் பயிற்சியின் போது கற்பித்தார்களா?

சாட்: ஆம்.

சத்: சட்டம்பற்றியும் கற்பித்தாரகளா?

சாட்: ஆம்.

சத்: பொலிஸ் அதிகாரிக்கு சட்ட அறிவு அவசியம் என்பதை ஏற்கிறீரா?

சாட்: ஆம்.

விசாரணை தொடர்கிறது.

### "யாரும் அடித்ததைப் பார்க்கவுமில்லை"

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுனில் டி. சில்வா சாட்சியத்தை நெறிப்படுத்திய போது ஏ. எஸ். பி. ஜுராம்பதி கூறியது:-

சுனில்:- நீர்வேலி வங்கிக் கொள்ளை, கொலை வழக்கின் சாட்சிகளாக இங்கு நிற்கும் 5 பேரையும் எப்போதாவது அடித்தீரா?

சாட்சி: இல்லை.

சுனில்; யாராவது அடித்ததைப் பார்த்தீரா?

சாட்: இல்லை.

சுனில்: இராணுவ, கடற்படை விமானப்படை வீரர்கள் யாராவது இவர்களைக் கண்டித்ததைப் பார்த்தீரா?

சாட்: இல்லை.

சுனில்: உமது முன்னிலையில் யாராவது அடித்ததைப் பார்த்தீரா?

சாட்: இல்லை.

சுனில்: 3-ம் எதிரியான சிவசுப்பிரமணியத்திடம் 81-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10,18ம் திகதிகளில் வாக்குமூலம் எடுத்தபோது சித்திரவதைகள், பயமுறுத்தல்கள், வற்புறுத்தல்கள் ஏதாவது நிகழ்ந்ததா?

சாட்: இல்லை.

சுனில்: நீங்கள் கேள்வி கேட்கும்போது சந்தேகநபர்களிடமிருந்து பதில் வராவிடின் 'என்னிடம் இவ்வாறு கேட்டால் இதுதான் பதில்' என்று அவர்கள் கூறுவதும் அது பதிவு செய்யப்படுவதும் உண்டா?

சாட்: ஆம்.

சுனில்: வாக்குமூலத்தில் சிறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது அவ்விடத்தில் சந்தேகநபரின் சிறுகையொப்பம் வாங்குதுண்டா?

சாட்: ஆம்.

சுனில்: வாக்குமூலம் எடுத்தபின் அதனைச் சந்தேகநபருக்கு விளங்கப்படுத்தினீரா?

சாட்: நானும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆப்டீனும் அவரிடம் (3-ம் எதிரி) எடுத்த வாக்குமூலம்பற்றி அவருக்கு விளங்கப்படுத்தினோம். வாக்குமூலம் அளித்தபின் சந்தேகநபர்கள் சில ஆட்களையும் காண்பிக்க விரும்பினார்கள். அதன்படி அந்தந்த இடங்களுக்கு நாம் அவரை அழைத்துச் சென்றோம். 19-ம் திகதி ஆனையிறவு முகாமிலிருந்து 1-ம், 2-ம் எதிரிகளை வெளியில் அழைத்துச் சென்றோம். வழியில் கொக்குவிலில் எஸ். அருணகிரிநாதனின் வீட்டை 1-ம் எதிரி காட்டினார். அவரைக் கைதுசெய்தோம். அதேதினம் தேவநேசன் அல்லது ஒப்ரேய் தேவனின் வீட்டை 1-ம் எதிரி காட்டினார். சிவச்செல்வம், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம் ஆகியோரது வீட்டையும் காட்டினார்கள். அவர்களையும் கைதுசெய்தோம். (இ)

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

★ வர்த்தக, விவசாய உபகரண வாடகைக் கொள்வனவு உதவி
★ விவசாயம், கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
★ நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
★ ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் — உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### நீர்வையில் தைப்பூசவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இம்மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு மூலவருக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட சங்காபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளது.

இரவு ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக திருமஞ்சத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவார். மேற்படி உற்சவத்தைஒட்டி விசேட மேளக்கச்சேரி பிரசங்கங்கள் இடம்பெறும்.

மேற்படி ஆலய பிரதமகுரு சுவாமி நாதராஜேந்திரக்குருக்கள் கிரியைகளை நடாத்துவார்.

### தோமஸ் அடிகள் நினைவுதினம்

(மாவிட்டபுரம்)

வண. தோமஸ் அடிகளாரின் 19வது அமரத்துவ ஞாபக பலிப்பூசையும் மற்றும் விசேட ஆராதனைகளும் இன்று வசாவிளான் தோலகட்டி ஞேசேறின் ஆச்சிரமத்தில் நடைபெற இருக்கின்றன.

அரும்பெரும் சேவைகள் செய்த வண. தோமஸ் அடிகளாரின் நினைவாக இடம்பெறும் இவ்வைபவங்களில் குருமார்களும், கன்னியாஸ்திரிகளும், கிறிஸ்தவ பொதுமக்களும் பங்கு கொள்வார்கள்.

### அன்பின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகளாக ஆற்றிய பணிகள் அளப்பரியன.

புனித பத்திரிசியார் கல்லூரியின் நற்போதக ஆசிரியராகத் துலங்கிய அவர் அனைத்து மாணவருக்கும் அன்பின் ஆசானாகத் துலங்கினார். இந்து மாணவ விடுதியின் பொறுப்பாளராக இருந்து அன்னைக்குரிய அன்போடும் தந்தைக்குரிய பாசத்தோடும் அனைவரையும் அரவணைத்து அதன் வழியாக ஆண்டவரின் அன்பை அவர்கள் அறியச் செய்தார்.

சாதி சமய பேதமின்றி அனைவரோடும் பண்போடு பழகி சமத்துவம், சகோதரத்துவம் எங்கும் நிலவ வாழ்க்கை வழியாகவும் வாய்மொழி மூலமாகவும் முனைந்து நின்றார். அனைவரும் இறைவனின் மக்கள் ஒரே குலம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்துவதில் உவப்புக் கொண்டார்.

தற்கால உலகை இறையடி கொணர இறையில் ஒன்றிக்கும் செபமும் தவமும் இன்றியமையாதது என்பதை நன்குணர்ந்த அவர் ஆசியாவின் முதற்தியானயோக சபையாக செபமாலைத்தாசர் சபையை தோலகட்டியில் நிறுவினார்.

இது தற்போது பாரதநாட்டிலும் தன் கிளைகளைப் பரப்பி பல்வேறு மடங்களில். குருக்கள் சகோதரர் ஒன்பது மடங்களிலும் கன்னியர் பத்து மடங்களிலும் இச்செபதவவாழ்வை வாழ்ந்து அகில உலகிற்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகின்றனர். இறையருளை வாரி வழங்குகின்றனர். இறைபணி புரிவதோடு பல்வேறுவழிகளில் மக்களுக்குத் தொண்டாற்றுகின்றனர்.

இவ் அரும்பெரும் செயலை ஆற்ற இறைவன் அருட்திரு தோமஸ் அடிகளாரை தம அன்புக்கருவியாக ஆக்கினார். அவர் வழிநின்று நாமும் இறைவழி வாழ்வோம்.

# "மக்கள் சேவையிலிருந்து குருமாரைபிரிக்க நடவடிக்கை'

## யாழ். பேராயர் தியோகுப்பிள்ளை கவலை

[பண்டத்தரிப்பு]

"மக்கள் சேவையிலிருந்து துறவிகளையும் குருமாரையும் பிரித்தெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளாரின் குருத்துவ சேவையைப்பாராட்டியும் அவரது கல்விச்சேவை, சமூக சேவை ஆகிய சேவைகளைப் பாராட்டியும் இந்த வெள்ளி விழாவை ஒழுங்குசெய்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது துறவிகள் சமூகப் பணி, இறைபணி ஏன் அரசியல்பணியில்கூட மக்களுடன் தான் ஒன்றுசேர்ந்து நிற்பார்கள்".

இவ்வாறு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளாரின் குருத்துவசேவையின் 25வது வருட வெள்ளிவிழாவில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பேராயர் அதிவந். கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியார் தலைமையில் இளவாலை அர்ச் அன்னம்மாள் தேவாலய திறந்தவெளியரங்கில் இவ்விழா நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் இளவாலைபங்குத்தந்தை அருட்திரு மல்க்கம் அடிகளாரின் புனித அன்னம்மாள் ஆலயத்தில் விசேடபூசை நடாத்தப்பட்டது. பேராயர் அதிவந் தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

"ஒரு குருவானவரின் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட தினங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். அவர் குருத்துவப் பட்டம் பெறும் தினம், 25 வருடம் இறைசேவை ஆற்றிய தினம், 50 வருட காலம் சேவையாற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி கூறும் தினம் ஆகியவையே இந்த முக்கியத்துவம்வாய்ந்த தினங்களாகும். அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள் சிறந்ததொரு கல்லூரியின் அதிபராக - இறை சேவைக்கு தம்மை அர்ப்பணித்த குருவாக இருந்து தொண்டாற்றிவருகின்றார். யாழ் குருக்கள் கல்லூரி அதிபராகவும், இத்தாலி நாட்டின் ரோமாபுரி நகரிலுள்ள அனைத்துலக குருக்கள் கல்லூரி துணை அதிபராகவும் இருந்து இறை பணிக்கு பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார்"

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டஅமைச்சின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா உரையாற்றுகையில்; கல்விச்சேவை, சமூகசேவை, இறைசேவை ஆகிய மூன்று துறைகளிலும் ஈடுபட்டு தொண்டாற்றிவரும் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளாரின் 25வருட வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

யாழ் கல்வித்திணைக்களத்தின் சார்பில் கலந்துகொண்ட யாழ் கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராசா, ஆசிரியர் திரு. திரு. எம். கே. பத்மநாதன், திரு. பஸ்தியாம்பிள்ளை ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் உரையாற்றினார்கள். அருட்திரு அன்ரன் இராசநாயகம் இறுதியில் பதிலுரை நிகழ்த்துகையில் தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

# இந்து கலாசாரத்தை பிரதிபலிக்கும் பட்டம் ஏற்றும் விழா

[புலோலி]

"இலங்கையில் காலிமுகத்திடல், மாத்தறை, பருத்தித்துறை ஆகிய மூன்று இடங்களில் தைப் பொங்கல் தினத்தையொட்டி பட்டம் ஏற்றும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இதில் பருத்தித்துறையில் இந்து இளைஞர் சங்கத்தால் நடத்தப்படும் பட்டம் ஏற்றும் விழாவே இந்து கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்ககூடிய மிகச் சிறந்த விழாவாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் இப்பட்டமேற்று விழாவை அகில இலங்கை ரீதியில் நடத்தி இந்து கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

இவ்வாறு பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தின் பொங்கல் விழாவிலும் பட்டம் ஏற்றும் போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவை பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ரீ. சிவலிங்கம் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

''பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் ஆண்டு தோறும் இந்து கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்த்துவரும் நோக்கமாகப் பொங்கல் விழாவையும் பட்டமேற்றும் போட்டியையும் அதிசிறப்பாக நடத்திவருவது பாராட்டப்பட வேண்டியதாகும். இவ் இந்து இளைஞர் சங்கத்தினர் சிறப்பாகச் செயற்படுவதற்கு மக்கள் அதிக ஊக்கம்காட்டி வருகின்றனர் என்பதற்கு இங்கு பெருமளவில் கூடியிருக்கும் மக்கள் கூட்டம் சான்று பகர்கின்றது. இச்சங்கம் மேலும் வளர்ச்சியடைந்து இந்து கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து இந்து கலை, கலாசாரத்திற்கு மெருகூட்டவேண்டும்.''

கொடியை ஏற்றி விழாவை பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ரீ. சிவலிங்கம் ஆரம்பித்துவைத்தார்.

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் பல ஆண்டுகளாகச் சிறப்பான முறையில் இப்பொங்கல் விழாவையும், பட்டமேற்றும் போட்டியையும் மிகச் சிறப்பாக நடத்தி வருவதை நான் காணுகின்றபோது மிக மகிழ்ச்சியடைகிறேன். இச்சங்கம் இந்து சமய மக்களுக்குப் பெரும் சேவைகளையாற்றிவருகின்றது.

விழாத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி தமது தலைமையுரையில், எந்தவொரு இனமும் தமது கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்க்காமல் உயர்வடைய முடியாது என்றார்.

பருத்தித்துறை நகரசபை உபதலைவர் டாக்டர் கே. வேல்முருகு, நகரசபை உறுப்பினர்களான திரு. மு. பொ. வீரவாகு, சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கம், டாக்டர்களான எஸ். யோகநாதன், எஸ். வேற்பிள்ளை உட்பட இன்னும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

பட்டமேற்றும் போட்டியில்- பழமைபேணும் போட்டியில் த. உதயராசா முதலாம் இடத்தையும், செ. செல்வமோகன் இரண்டாம் இடத்தையும், ந. யோகராசா மூன்றாம் இடத்தையும், புதுமைப் போட்டியில் சி. சிவகுமார் 1ம் இடத்தையும், கி. கிருஷ்ணா 2ம் இடத்தையும், அ. சுரேஷ்குமார் 3ம் இடத்தையும் தட்டிக்கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி இரதி மயிலேறும் பெருமாள் வழங்கினார். சங்கச் செயலாளர் திரு. எஸ் திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார்.

# இன்றைய பலன்

தை மாதம் 13-ந் திகதி
புதன்கிழமை
(26—1—83)

**மேடம்:** உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. தாய்வழிப் பொருள்வரவுக்கும் இடமுண்டு உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

**இடபம்:** குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும், திடீர் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம் மேல் அதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**மிதுனம்:** எதிர்பார்த்த முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் கவலைப்படுவீர்கள். பெரியவர் ஒருவர் ஆறுதலளிக்க முன்வருவார்.

**கடகம்:** வாழ்க்கையில்தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்கு கனிவான தினம். கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும். சுகபோக தினம்.

**சிங்கம்:** துஷ்டர்கள் உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டி வைக்கும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்குவிவகாரங்களைத் தவிர்க்கவும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**கன்னி:** மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

**துலாம்:** நினைத்ததை முடிப்பதில் இன்று வெற்றிகாண்பீர்கள். தொழில் துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் தென்றல்வீசும்.

**விருச்சிகம்:** எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய் குறை கேட்க நேரிடும். உடல் நலத்தைப் பேணி நடக்கவும்.

**தனு:** புண்ணிய காரியங்களில் புதியஉற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்நிற்பீர்கள். தெய்வ குரு பக்திக்கும் இடமுண்டு. நல்ல நாள்.

**மகரம்:** சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராதவிதமாக உடல் நலன் பாதிக்கப்படும்.

**கும்பம்:** பேச்சு வன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்கு செல்வாக்கைத் தேடித்தரும். வரவில் உயர்வுண்டு. பிதாவழித் தனமும் சேரும்.

**மீனம்:** புதிய கோணத்தில் இருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. துணைவியேதுணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் சேரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

# இன்று நடக்கும் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தின் கைதடி கிராமிய குழுத் தொண்டர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை கைதடி கலைவாணிப்பாடசாலை திரு என். கே. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் இலங்கை குடும்பத் திட்டச் சங்க யாழ் மாவட்ட செயற் குழுவின் செயலாளர் திருமதி யோகேந்திரா. துரைச்சுவாமி, யாழ் மாவட்ட குடும்பத்திட்ட அதிகாரி திரு ஏ. எஸ் பூவேந்திரன், சாவகச்சேரி வைத்திய அதிகாரி திரு க. நடராஜா, பிரதேச சபைத்தலைவர் திரு க. வே. முத்துக்குமாரசுவாமி ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள் விழா இறுதியில் கைதடி கிராமிய செயற்குழுத் தொண்டர்களின் கலைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

# "ஒல்லாந்தர் காலத்து கலாச்சாரச் சின்னங்கள்"


[புங்குடுதீவு]

"ஒல்லாந்தர் காலத்தில் ஒழிக்கப்பட்ட தமிழின கலாச்சாரச் சின்னங்கள் இன்றும் தொல்பொருள் ஆய்வாளர்களால் தோண்டி எடுக்கப்படுகின்றன. அந்தக்காலத்தில் ஒல்லாந்தரின் நட்புக்குரியவனாய்த் திகழ்ந்த பட்டையக்காரன் என்பவரின்பரிபாலிப்பிலிருந்த இருபிட்டி பட்டையாறம்மன் என வழங்கிய இராஜராஜேஸ்வரி தாக்குதலிலிருந்து தப்பியிருக்கிறாள்''.

மேற்கண்டவாறு புங்குடுதீவு மேற்கு இருபிட்டி பட்டயக்காரன் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் அடியார் சபையினரின் விசேட ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார்.

அடியார் சபைச் செயலாளர் திரு. சோ. நாகரெத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து பேசுகையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து புதுப்பொலிவு காணவேண்டுமென்றும் பக்தியும் பணி செய்யும் ஆர்வமும் நிறைந்த நிர்வாகசபைஅமைய வேண்டும். நிர்வாகம் என்பது எதனை எப்பொழுது எதன் மூலம் தொழில் படுத்தலாம் என்று சிந்தித்துச் செயல்படுவதாகும். புறவாழ்க்கை சபைகள் சங்கங்கள் மன்றங்கள் இயக்கங்கள் முதலியவற்றினை நிர்வகிப்பதிலிருந்து கோவிலை நிர்வகிப்பதென்பது முற்றிலும் மாறுபட்டதாகும். ஆலய பரிபாலனம் அகத்துறை புனிதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் என்றார்.

CENTRIC
சென்ட்றிக் விவசாய பம்ப்.




● உலகப் புகழ் றுெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ.5,250/- முதல்.
1½", 2", 3", 4" ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2
தொலைபேசி: 26558/9

## 'கோபாலன்' வெற்றிக் கேடயத்தை இலங்கை வென்றது!

(கொழும்பு)

'கோபாலன்' வெற்றி கேடயத்தை இலங்கை இந்த ஆண்டும் தனதாக்கிக் கொண்டது,

கொழும்பு சரவணமுத்து கிரிக்கெட் திடலில் கடந்த மூன்று தினங்களாக தமிழ் நாடு கிரிக்கெட் அணிக்கும், இலங்கை தலைவர் கிரிக்கெட் அணிக்குமிடையே இந்தக் கேடயத்துக்கான பந்தயம் நடைபெற்றது. இலங்கை அணிக்கு வீரர் டுலீப் மெண்டிஸ் தலைமைதாங்கினுர்.

ஆண்டுதோறும் 'கோபாலன்' கேடயத்துக்கான கிரிக்கெட் பந்தயம், இந்தியாவிலும், இலங்கையிலும் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுடன் இலங்கை 16-வது தடவையாக 'கோபாலன்' கேடயத்தை சுவீகரித்தது. தமிழ்நாடு அணி எட்டுத் தடவைகள் இந்த கேடயத்தை சுவீகரித்திருந்தது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் காப்டன் டுலீப் மெண்டிஸ் 189 ஓட்டங்களைப் பெற்ருர். அசந்தா டிமெல் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்ருர். இலங்கை அணி பெற்ற மொத்த எண்ணிக்கை 450 ஆகும்.

தமிழ்நாடு அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 258 ஓட்டங்களைப் பெற்றது. விஜயக்குமார் ஆட்டமிழக்காது 61 ஓட்டப் பெற்ருர். தமிழ் நாடு அணி 2-வது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவடையும் வரை 3 விக்கெட் நஷ்டத்துக்கு 75 ஓட்டங்களைப் பெற்றது.


வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 6-15, 9-15
சனி.ஞாயிறு 2-30
நானும் ஒரு பெண்

றீகல் (யாழ். நகர்)
கடைசி சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி 25-27 யாழ்.
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ராஜஸ்ரீ
அனுபவம் புதுமை
(புதிய பிரதி)

கடைசி சிலதினங்கள்
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சக்கிரபாணி - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
3-2-83 முதல்
சிவாஜி-சாவித்திரி
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)


### கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் கருத்தரங்கு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் வரும் 29-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.


வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் : ஜோதி
ரயில் பயணங்களில் (கலர்)

லிடோ (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
31-1-83 வரை
ராமன் எத்தனை ராமனடி
1-2-83 முதல் மாயா பஜார்

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
Weng Weng in
FOR YOUR HEIGHT ONLY
(Bond Film color)
4-2-83 முதல் பாதாள பைரவி

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)


# 'தேவரையாளிஇந்துக்கல்லூரி புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது"

- உடுப்பிட்டி எம். பி.

(கரவெட்டி)

"கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப் படாமலிருந்திருந்தால் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களது வரலாறே மாறியிருக்கும்".

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கரவெட்டி தேவரையாளி சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

தேவரையாளி முன்றலில் திரு. ஆ. தம்பையா தலைமையில் நடந்த இவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு இராசலிங்கம் மேலும் பேசுகையில்:-

"ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் போட்டியான ஒரு சூழ்நிலையில் தேவரையாளிக் கிராமம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. 1925ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட கரவெட்டி தேவரையாளிபற்றிய வரலாற்றில் வதிரிப் பகுதியில் பாடசாலைகள் மூலம் மதம்மாற்ற எடுக்கப்பட்ட உண்மை வெளியாகியுள்ளது. அந்த வேளையில் தோற்றுவிக்கப்பட்ட கலைஞான சபையால் இந்த மதமாற்ற முயற்சி தடுக்கப்பட்டுள்ளதுடன் இப்பகுதி மக்களின் சமூக உணர்வும் மதப்பற்றும் பாதுகாக்கப்பட்டது.

இதன் விளைவாகவே இந்து சமயம் இன்றும் இங்கே நிலைத்திருக்கக்கூடியதாகவுள்ளது என்பதை எவரும் மறைத்துவிடவோ மறுக்கவோ முடியாது.

தேவரையாளி மக்கள் அன்றே கிறிஸ்தவ மதத்திலோ, இஸ்லாம் மதத்திலோ அல்லது பௌத்த மதத்திலோ சேர்ந்திருந்தால் இம்மக்களின் எதிர்காலம் திசை திரும்பியிருப்பதுடன் தமிழ் மக்களது வரலாறும் பெரும மாற்றத்தைக் கண்டிருக்கும்.

இங்கே பாரிய தண்ணீர்த் திட்டம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்தேன். அதை நிறைவேற்ற உத்தியோக நடவடிக்கையின் மூலமாக பல சிக்கல், கஷ்டம் ஏற்பட்டது. இறுதியில் ஒரு கிணற்றையாவது அமைப்பதற்கு முயற்சி மேற்கொண்டேன். அதுவும் பயனளிக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் திறுவப்பட்ட மாதிரிக் கிராமமான கரவெட்டி கன்பொல்லை இராசகிராமத்திற்குப் பின்னர் தொகுதி ரீதியாக மாதிரிக் கிராமங்களை அமைப்பதென்ற அரசாங்கத்தின் திட்டம் கொண்டுவரப்பட்ட போது உடுப்பிட்டித் தொகுதியில் கரவெட்டி தேவரையாளிக் கிராமத்தையே தெரிவு செய்தேன். ஆனுல் அதுவும் கைகூடவில்லை.

கரவெட்டி தேவரையாளி தொழில்நுட்பக் கல்லூரி, இந்நாட்டில் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வரும் மாற்றங்களை உணர்ந்தே உருவாக்கப்பட்டது"

இவ்விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினர் திரு. சி. க. இராசேந்திரன், வடமராட்சி சனசமூக நிலைய சமாசத் தலைவர் திரு. ம. கணேசலிங்கம், அல்வாய் தெற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. ஆ. கதிரவேல், விசேட சேவை உத்தியோகத்தர் திரு. தி. வரதராசன் உட்பட பலர் உரையாற்றினுர்கள்.

### இடமாற்றம்

புலோலி)

பருத்தித்துறைத் தபால்நிலையத்தில் உதவித் தபால் அதிபர்களாகக் கடமையாற்றிய திரு. எம். கார்த்திகேசு கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கும் திரு எஸ். ராசரத்தினம் மடுதேவாலயதபால் நிலையத்திற்கும் திரு. எஸ். அரியரத்தினம் ஏருவூர் தபால் நிலையத்திற்கும், திரு. பொ. திருச்செல்வம் முருங்கன் தபால் நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களது இடத்திற்கு எஸ். சேதுலிங்கம் கொட்டாஞ்சேனை தபால் நிலையத்திலிருந்தும் கே. அச்சலிங்கம் எஸ். சிவம் ஆகியோர் கொழும்பு மத்தியதபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்தும் திரு சதா. சிவலோகநாதன் கிளிநொச்சி தபால் நிலையத்திலிருந்தும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

### வெற்றிப் பாதையில் யாழ். மாவட்ட 'நிஸ்கோ'

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் பார்க்க விரும்பும் இளைஞர்களுக்கு உதவும்முகமாகத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அமைக்கப்பட்ட 'நிஸ்கோ' கூட்டுறவு அமைப்பு வெற்றியளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'நிஸ்கோ' அமைப்பில் அறுநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். சுயதொழிற் துறைகளில் ஈடுபட விரும்பும் இம்மாவட்ட இளைஞர்களுக்கு இந்த அமைப்பு நிதியுதவி பெற்றுக் கொடுத்து ஊக்குவித்து வருகின்றது.

இளைஞர்களைச் சேமிப்புத் திட்டத்திலும் ஊக்குவித்து வரும் 'நிஸ்கோ'. சேமிப்பிற்குப் பதினெட்டு வீத வட்டியையும் வழங்குகின்றது. இச்சேமிப்புத் திட்டத்திற்கான பணத்தைப் பாடசாலை மாணவர்களிடம் இருந்தும், செல்வந்தர்கள் மூலமாகவும் திரட்டிக்கொள்வதற்கான முயற்சியை நிஸ்கோ பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

கூடுதலான சேமிப்புப் பணத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு உதவக் கூடியதாக இருக்குமென்றும். சுயதொழில் துறைகளுக்கான கடன்வசதிகளையும் வழங்கக் கூடியதாக இருக்குமென்றும் தேசிய இளைஞர் சேவை மன்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி தெரிவித்தார்.

[அ]

### வட்டு. தொகுதியிலுள்ள "சிற்றூர்களில் 'குஷ்டநோய்' அபாயம்!

### வட்டு. லயன்ஸ்கழகதலைவர்எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள காட்டுப்புலம், குடத்தனை, புன்னாலை, மூளாய், சுளிபுரம் ஆகிய சிற்றூர்களில் 'குஷ்டநோய்' அபாயம் தோன்றியிருப்பதை வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத்தலைவர் திரு. ஈ. விஜயரட்ணம் எடுத்துக்காட்டியுள்ளார்.

கடந்த 23ந் திகதி சுளிபுரத்தில் 'குஷ்ட நோய்' தடுப்புப் பிரசாரக்கருத்தரங்கொன்றை வட்டு. லயன் கழகம் ஒழுங்கு செய்திருந்தது. இக்கருத்தரங்கிலேயே திரு. விஜயரட்ணம் 'குஷ்டநோய்' அபாயம் மேற்குறிப்பிட்ட சிற்றூர்களில் பரவிவருவது குறித்த தகவல்களை வெயிட்டார்.

இக்கருத்தரங்கு சுளிபுரம் சௌக்கிய அபிவிருத்திக்கமிட்டித் தலைவர் திரு. கே. அருணாசலம் தலைமையில் இடம்பெற்றது. யாழ். மருத்துவ பீட பேராசிரியர் சிறீதரன், யாழ். வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் எஸ். யோகநாதன், மருத்துவபீடத்தைச் சேர்ந்த டாக்டர் என். சிவராஜா ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

லயன் ஈ. விஜயரட்ணம் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் காட்டுப்புலம் என்ற சிற்றூரில் உள்ள 514 பேரில் 57 பேருக்கு குஷ்டநோய் காணப்படுவது தெரிய வந்துள்ளது. இத்துடன் இந்த ஊரை அண்டியுள்ள குடத்தனை என்ற ஊரிலும் இந்த நோய் அபாயங்கள் தென்பட்டுவருகின்றமை அறியப்பட்டுள்ளது.

திரு. ஈ. விஜயரட்ணம் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டதோடு இந்த நோய் அபாயத்திலிருந்தும் இப்பகுதி மக்களை விடுவித்துக்கொள்ள தகுந்த வைத்திய ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கருத்தரங்கில் சமூகமளித்த வைத்திய நிபுணர்களைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சனசமூக நிலையங்களை அமைத்து அவற்றின் மூலமாக வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் வழங்கலாமென்றும் ஆலோசனை தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட வேண்டுகோளையும் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்ட நிபுணர்கள் ஏற்றுக் கொண்டு தமது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தனர்.

(கி)

### கசிப்பு வேட்டை!

(மாவிட்டபுரம்)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்ததாக கைதான நபர்கள் இருவருக்கு மல்லாகம் நீதிபதி அபராதம் விதித்தார்.

காங்கேசன்துறைப் பொலிசார் தையிட்டியில் இந்தக் கசிப்பு வேட்டையை நடாத்தினர். மல்லாகம் நீதிமன்றத்தில் எஸ். குலேந்திரசிங்கம் என்பவருக்கு முன்குற்றமும் இருந்ததால் 500 ரூபா அபராதமும், எஸ். சின்னத்தம்பி என்பவருக்கு 200 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

### பிள்ளையார் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை காலைநிகழும். இக் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இன்று மாலை ஆரம்பமாகின்றன.

மார்ச் மாதம் 3ம் திகதி வரை மண்டலாபிஷேகம் தொடர்ந்து நிகழும்.

[ய]

ஆனைக்கோட்டை பொலிஸ்நிலைய தாக்குதல்

# சந்தேக நபர் அடையாளம் காணப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாக நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் சாட்சிகளால் அடையாளம் காணப்படவில்லை.

யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நேற்றுக்காலை 10-15 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

1981ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி இரவு ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் நடைபெற்றது. இச்சம்பவம் தொடர்பாக நடந்த விசாரணையைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று வாகனமொன்றில், மூடிமறைக்கப்பட்டு சந்தேக நபர்கள் நால்வரும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். அடையாள அணிவகுப்பில் 32 பேருடன் சந்தேகநபர்கள் நால்வரும், அணிவகுத்து நின்றனர்.

சாட்சிகளாக சார்ஜன் தில்லான்துரை, மினி பஸ் சாரதி, பிரயாணி ஒருவர் அழைக்கப்பட்டிருந்தனர். சாட்சிகளால் சந்தேகநபர் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

அடையாள அணிவகுப்பு முடிவடைந்ததும், மீண்டும் சந்தேகநபர்கள் மூடி மறைக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டனர். (க)

## தூத்துக்குடி கொழும்பு கப்பல்சேவை

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் புதிய கப்பல் சேவை ஒன்றை இந்தியா ஆரம்பிக்கவிருக்கிறது.

இந்தக் கப்பலில் 600 முதல் 800 பிரயாணிகள் செல்லக் கூடியவசதி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ரூ. 50,000 நகை திருட்டு: பேசாலையில் சம்பவம்

(மன்னார்)

ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் நேற்று அதிகாலை வீட்டிலிருந்து திருட்டுப்போனது! அத்தோடு, அங்கு தங்கும் ஆசாமியும் மாயமாக மறைந்துபோனார்! பேசாலையில் இச்சம்பவம் நடந்தது.

செபஸ்தியான் குருஸ் என்பவருக்குச் சொந்தமான வீட்டிலேயே இந்தப் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளன.

வீட்டுச் சொந்தக்காரர் திருட்டுப்போனபோது கொழும்பில் இருந்தார். அவருக்குக் கீழ் வேலைசெய்யும் தொழிலாளி ஒருவர், பிடித்து வந்த மீன்களை கடற்கரையில் எடுப்பதற்காக வீட்டுச் சொந்தக்காரரின் மனைவி நேற்று அதிகாலை சென்றார்; அப்போது மீன்பிடி வள்ளத்தில் மீன் பிடித்து வந்தவர், அலுப்பாக இருக்கிறது என்று கூறு, வழக்கமாகத் தங்கும் முதலாளி வீட்டுக்குச் சென்றார். அங்கு வயோதிப மாது ஒருவரும், பிள்ளைகளுமே தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஏதோ சத்தம் கேட்கவே, வயோதிப மாது எழும்பிப் பார்த்தார். உடுப்புகள் பார்சலாக கட்டி வைக்கப்பட்டிருந்ததையும், நகைகள் காணமற் போயிருப்பதையும் வயோதிபப்பெண் கண்டாராம்.

படுத்திருந்த தொழிலாளியான கிறிஸ்தோபரும் எழுந்து கடற்கரையில் அப்போது இருந்த வீட்டுக்காரியிடம் சொல்லிவிட்டு வருவதாகக் கூறிப்போனாராம். போனவர் திரும்பவில்லை.

இவரைத் தேடி மன்னார் பொலிஸார் வலை விரித்துள்ளனர். இன்ஸ்பெக்டர் பொன். சுகுணேந்திரன் தலைமையிலான கோஷ்டி விசாரணை செய்து வருகிறது.

## மல்லாகம்.,.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார்.

தீர்ப்பை அறிவதற்கு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

சட்டத்தரணிகள் தொகுப்புரையைத்தொடர்ந்து நேற்று நீதிபதி உரைநிகழ்த்தினார். இதனைத்தொடர்ந்து ஜூரி சபையினர் பிற்பகல் 3-15 மணிக்குச் சென்று தனிமையில் ஆலோசனை செய்த பின்னர் பிற்பகல் 4-15 மணிக்கு தங்கள் முடிவை நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஜூரிசபையினர் ஏகமனதாக 1ம், 2ம் எதிரிகள் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்ததைத்தொடர்ந்து நீதிபதி எதிரிகள் இருவரையும் விடுதலை செய்தார்.

யாழ். நீதிமன்ற வாசலில் எதிரிகளின் சட்டத்தரணிகளை மாலை சூட்டி அழைத்துச்சென்றனர். (க)

## மற்றுமொருவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டனர்.

சுபாஸ் ஹோட்டல் உரிமையாளர் திரு. சங்கரன், சின்னத்துரை அன்பிறதேர்ஸ், மில்க்வைற் தொழிலதிபர் திரு. கனகராஜா, சிலோன் மேர்ச்சண்ட்ஸ் லிமிட்டெட் உரிமையாளர் மற்றும்யாழ். வர்த்தக பிரமுகர்கள் பிரேதங்களைக் கொண்டுசெல்வதற்கான உதவிகளை வழங்கமுன்வந்துள்ளனர்.

சுகமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய மீதி 15 பேரும் கிளிநொச்சி நவஜீவனத்தில் தங்கியிருக்க வசதிகளில்லாததால்காந்தியஇயக்க அமைப்புச்செயலாளர் திரு. பா. வை. ஜெயபாலன் இவர்களை பொறுப்பேற்று பரந்தன் முல்லைத்தீவு வீதியிலுள்ள வை. எம். சி. ஏ.யில் ஒப்படைத்துள்ளார். வை, எம், சி. ஏ, நிர்வாகி திரு. எதிர்வீரசிங்கம் பிரயாணிகளுக்கு தகுந்த வசதிகளை செய்துவருகிறார், மேற்கொண்டு நலன்களைக்கவனித்துவரும் திரு. ஜெயபாலன், கிளிநொச்சியில் தங்கியிருக்கும் 15 பேரையும் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து இறந்த மூவரின் சடலங்களைப் பார்வையிடவும், அஞ்சலி செலுத்தவும் அழைத்துவரப்படுவர் என்று தெரிவித்தார்

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு. ரங்கநாதனும் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து காயமடைந்தவர்களினதும், இறந்தவரினதும் நலன்களைக் கவனித்தார்.

இன்று புதன்கிழமை இந்திய தூதுவராலயத்தை சேர்ந்த அதிகாரிகள் மூன்று பிரேதங்களையும் கொண்டுசெல்வதற்கு அதிகாரபூர்வமான ஒழுங்குகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று இரவு 10 மணிக்கு சடலங்கள் மன்னாருக்கு மோட்டார் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டு, நாளை வியாழக்கிழமை இந்தியா புறப்படும் கப்பலில் ஏற்றி அனுப்பிவைக்கப்படும் என்றும் இக்கப்பலில் மேலும் சுகமடைந்தபிரயாணிகள் அவர்களின் விருப்பத்தின்பேரில் செல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் திரு. ரங்கநாதன் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் இந்திய உல்லாசப்பிரயாணிகளை நேற்று அ. இ. அ. தி. க. வினர் அதன் அமைப்புச் செயலாளர் பொ. மதிமுகராஜா தலைமையில் சென்று பார்வையிட்டு நிலைமைகளை விசாரித்தறிந்து கொண்டு ஆறுதல் கூறினார்கள். (மா)


**Diploma In Radio And Electronic Engineering**

யாழ்ப்பாணத்தில்

முதன்முறையாக அனுபவமும் தகைமையுமுள்ள ஆசிரியர்களால் 6 மாதபயிற்சி அளிக்கப்படவுள்ளது.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் சுயமாகத் தொழில் புரிவதற்கும் எமது இளஞ் சந்ததியினருக்கோரரிய வாய்ப்பு.**

கட்டணம்: Theory Rs. 750/-
Practicals Rs. 750/-

பயிற்சியின் முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப்பாகங்களைக் கொண்டு உதவி யெதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு, சிக்கலான - நுட்பமான எவ்வித பழுதையும் சிரமமின்றித் தாமாகவே கண்டுபிடித்துத் திருத்தும் வல்லமையையும் பெறலாம்.

தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்யும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் இலவச Theory அளிக்கப்படும்.

தேர்வுப்பரீட்சை - 04-02-1983
விண்ணப்பக்கட்டணம் - ரூபா. 2/-

விண்ணப்பப்பத்திரங்களை நேரில் வந்து பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

**CANTABIA INSTITUTE**

**1st Floor, Cantabia Building**

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
21, Main Street, Jaffna.

தொலைபேசி: 24201



**இன்று**

புதிய அச்சுக்கூடத் திறப்புவிழா
நிகழும் 1983-ம் ஆண்டு தை மாதம் 13-ம் நாள் (26-01-83) புதன்கிழமை
யாழ்ப்பாணம், முனீஸ்வரன் வீதி
இல: 37-இல் அமைந்துள்ள

**முகுந்தா பிரிண்டேர்ஸ்**

என்னும் புதிய அச்சுக்கூடத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்களும் சமூகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்.

* சகலவித அச்சு வேலைகளுக்கும்,
* திருமண மற்றும் அழைப்பிதழ்களுக்கும்

நினைவில் வைத்திருக்க வேண்டிய ஸ்தாபனம்
முகுந்தா பிறிண்டேர்ஸ் 5972



## மரண அறிவித்தல்

சுவக்கின்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை

பண்டத்தரிப்பு பத்திமா கிரியில் வதியும், திருக்குடும்ப ஸ்ரோர் அதிபரும், மரக்காலை செல்வத்துரை என அழைக்கப்படுபவருமாகிய சுவக்கின்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை இறைவனில் புதுவாழ்வு அடைந்துள்ளார். இவர் சுவக்கின்பிள்ளை சூசானத்தின் மூத்த புதல்வரும், ஆரோக்கியநாதர், பத்திநாதர், காலஞ்சென்ற றேசமுத்துவின் சகோதரரும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாகிறேற், காலஞ்சென்ற ஜெயதாசன், யேசுதாசன், தார்சில்லா, எலிசபெத், பத்மதாசன் (குமரன் அச்சகம்), விமலதாசன் (மனிதன் ஆசிரியர்), பாலதாசன் (திருக்குடும்ப ஸ்ரோர் முகாமையாளர்), ஜெயநேசம், சகாயதாசன் (தேசிய குருமடம், அம்பிட்டியா), தேவதாசன், அக்னெஸ், வெல்சிஸ், தேவநேசம் கார்மெள, அமலதாசன் கெனடி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அமரரின் மறையுடல் 26-01-1983 (இன்று) புதன் மாலை பி. ப. 4 மணியளவில் பத்திமாமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 5976


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka; under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.